தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

ஆறாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2017**

**D061** இலக்கியத் திறனாய்வு

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. திறனாய்வின் இரண்டு வகைகள் எவையெவை என ஆபர்குரோம்பி கூறியுள்ளார்?
2. அரிஸ்டாட்டில் கொள்கைப்படி எச்சுவை தலையாயது?
3. பாரதிதாசன் படைப்புகளில் கதைப்பாடல் வடிவில் அமைந்தவை எவையேனும் இரண்டின் பெயர் எழுதுக.
4. சிலப்பதிகாரத்தில் இல்லற நெறியினை வெளிப்படுத்தும் காதை எது?
5. தன்னுணர்ச்சிப் பாடலை ஆங்கிலத்தில் எவ்வாறு அழைப்பர்?
6. முடிவையொட்டிய நாடகங்கள் இரு பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளமையை எழுதுக.
7. தமிழில் தோன்றிய முதல் புதினம் எது?
8. கவிதையாவது எதனால் ஆக்கம் பெறுவது?
9. மனோன்மணீய நாடகத்தில் தலையாயப் பாத்திரம் எது?
10. கற்பனையைப் பற்றி வின்செஸ்டர் கூறுவது யாது?
11. விருத்தப்பாவில் எழுதப்பட்ட காப்பியம் எது?
12. 'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும் கண்ணிய புறனே நானான் கென்ப' இந்நூற்பா இடம்பெறும் நூலின் பெயர் என்ன?
13. பெருங்காப்பியத்திற்கான இலக்கணத்தைக் கூறும் நூல் எது?
14. ‘Structuralism’ எனும் கோட்பாட்டிற்குத் தமிழில் வழங்கப்படும் சொல் யாது?
15. தமிழில் உள்ள மார்க்சிய திறனாய்வாளர்களில் ஒருவர் பெயர் எழுதுக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. படைப்பிலக்கியம் - திறனாய்வு வேற்றுமையை எழுதுக.
2. திறனாய்வாளரின் முயற்சிகள் குறித்து எழுதுக.
3. மனப்படைப்பு என்றால் என்ன?
4. யாப்பொலியின் வகையில் அளவு குறித்து எழுதுக.
5. இணைக்கதை குறிப்பு வரைக.
6. இக்காலப் புதினங்களின் புதிய கோட்பாடுகள் பற்றி எழுதுக.
7. புலம்பெயர்ந்தவர்களின் இடர்ப்பாடுகள் சிலவற்றை விளக்குக.
8. திறனாய்வின் முன்னோடிகள் யார்? யார்?

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) திறனாய்வாளருக்குரிய திறன் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இலக்கிய உணர்ச்சிகள் குறித்து விளக்கி எழுதுக.

2. (அ) கற்பனை பற்றி கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பின் நவீனத்துவத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி எழுதுக.

3. (அ) பெண்ணிய வகைகளும் அவற்றின் தேவைகளும் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) இலக்கிய மதிப்பீடு பற்றி நீவிர் உணர்ந்தவற்றை எழுதுக.

*** *